# வாணியம்பாடி மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

முன்னிலை – திரு. எம். முனிமாதன்.,எம்.எஸ்.சி.,எம்.எட்.,எம்.பில்.

ந.க.எண். 1690/அ4/2022 நாள். –06–2022.

---

பொருள்: 2009 – ஆம் ஆண்டு குழந்தைகளுக்கான இலவசக் கல்வி மற்றும் கட்டாயக்கல்வி பெறும் உரிமைச்சட்டத்தின் 18– ஆம் பிரிவின் கீழ் வரும் செயல் நோக்கத்திற்காக 2011–ஆம் ஆண்டு குழந்தைகளுக்கான இலவசக் கல்வி மற்றும் கட்டாயக்கல்வி பெறும் உரிமை விதிகளில் 15–ஆம் விதியைச் சேர்ந்த (4) துணை விதியின் கீழ் பள்ளிகளுக்கு தற்காலிக தொடர் அங்கீகாரம் அளித்தல் – சார்பு.

பார்வை: 1. அரசாணை நிலை எண்.101 (ப.க.து) நாள்.18.5.2018.
2. அரசாணை நிலை எண்.108 (ப.க.து) நாள்.26.5.2018.
3. அரசாணை(நிலை) எண். 66 பள்ளிக்கல்வி ( MS) த் துறை நாள். 03.08.2020.
4. நாட்றம்பள்ளி, வட்டாரக்கல்வி அலுவலரின் பார்வை அறிக்கை நாள் :08.06.2022

..........

திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளி, வட்டாரக்கல்வி அலுவலரின் நேரடி பார்வையின் ஆய்வறிக்கை மற்றும் பரிந்துரையினை ஏற்று கீழ்க்குறிப்பிட்டுள்ள மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளிக்கு 01–06–2022 முதல் 31–05–2023 வரை மாணவர்களின் நலன் கருதியும் பள்ளி இடையூறு இன்றி தொடர்ந்து செயல்படும் விதமாகவும் கீழ்க்காணும் நிபந்தனைகளின் அடிப்படையில் பார்வை 4 ல் காணும் நாட்றம்பள்ளி, வட்டாரக் கல்வி அலுவலரின் பரிந்துரையின் படி தொடர் அங்கீகாரம் புதுப்பித்து அனுமதி ஆணை இதன் மூலம் வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| பள்ளியின் பெயர் | நயாமதரசா சிறுபான்மை உருது(நிதியுதவி பெறாவை) தொடக்கப்பள்ளி, நேதாஜி நகர், ஆகாங்காயம் ரோட், வாணியம்பாடி திருப்பத்தூர் மாவட்டம். |
| பள்ளி அமைந்துள்ள ஒன்றியம் கல்வி மாவட்டம் மற்றும் , மாவட்டம் | நாட்றம்பள்ளி ஒன்றியம், வாணியம்பாடி கல்வி மாவட்டம், திருப்பத்தூர் மாவட்டம். |
| வகுப்பு | 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை |
| புதிய பதிவெண் | 1690/அ4/2022 நாள் . .06.2022. |

**பின்வரும் நிபந்தனைகளை முழுமையாக நிறைவேற்றப்படுவதற்கு உட்பட்டு இவ்வாணை வழங்கப்படுகிறது.**

| | |
|---|---|
| 01 | பள்ளிக்கான இந்த அங்கீகாரம் ஐந்தாம் வகுப்பு மேல் நீட்டிக்கத் தக்கதல்ல அதற்கு மேற்பட்ட வகுப்புகளுக்கு செல்வாக்கின் அடிப்படையில் அங்கீகாரம் அளிப்பது / இணைப்பது இதற்கு எவ்வகையிலும் பொருந்தாது. |
| 02 | 2009–ஆம் ஆண்டு குழந்தைகளுக்கான இலவசக் கல்வி மற்றும் கட்டாயக் கல்வி பெறும் உரிமைச் சட்டத்தின் விதித் துறைகள் மற்றும் 2011–ஆம் ஆண்டு குழந்தைகளுக்கான இலவசக் கல்வி மற்றும் கட்டாயக்கல்வி பெறும் உரிமை விதிகளை பள்ளிகள் பின்பற்ற வேண்டும். |
| 03 | பள்ளிக் கல்வித் துறையில் அரசாணை மற்றும் செயல்முறைகளின் அடிப்படையில் சிறுபான்மையற்ற சுயநிதி பள்ளியாயின், பள்ளியின் சுற்று வட்டாரப் பகுதிகளிலுள்ள நலிவுற்ற பிரிவினர் மற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினர்/சிறப்பு பிரிவினர் ஆகியோருக்கு நுழைவுநிலை வகுப்பில் மொத்த எண்ணிக்கையில் 25% வரையில் சேர்க்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| 04 | பத்தி 3–ல் குறிப்பிடப்பட்டுள்ள குழந்தைகளுக்கான இச்சட்டத்தின் 12–ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலுள்ள விதித் துறைகளுக்கிணங்க, பள்ளிகள் செலவுத் தொகையை திருப்பிச் செலுத்த வேண்டும். இவ்வாறு திருப்பிச் செலுத்தப்படும் தொகையைப் பெறுவதற்கு, பள்ளி தனி வங்கி கணக்கு ஒன்றை வைத்து வரவேண்டும். |
| 05 | பள்ளி, எந்தவொரு நன்கொடை கட்டணத்தையும் வசூலிக்கக் கூடாது மற்றும் குழந்தைகளை அல்லது அவர்களுடைய பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்களை எந்தவொரு நுழைவுத்தேர்வு பரிசோதனை நடைமுறைக்கும் உட்படுத்தக்கூடாது. |
| 06 | எந்தவொரு குழந்தையும் பள்ளியில் சேர்ப்பதற்கு பள்ளி யாதொரு மறுப்பையும் தெரிவிக்கக்கூடாது. |
| a) | பள்ளி சேர்க்கைக்கு பரிந்துரைக்கப்பட்ட கால வரையரை நீட்டிக்கப்பட்டதையடுத்து, பள்ளியில் சேர வரும் எந்தவொரு குழந்தையையும் வயது சான்று வற்புறுத்தாமல் சேர்க்கை வழங்கப்படவேண்டும். |
| b) | சமயம், சாதி அல்லது இனம், பிறந்த இடம் ஆகியவற்றை அடிப்படையிலும், பள்ளியில் சேரும் குழந்தைகளின் உரிமை மறுக்கப்படக் கூடாது. பள்ளியானது பின்வரும் கோட்பாடுகளை உறுதி செய்ய வேண்டும்.<br>(1) குழந்தைளை தொடக்கக் கல்வி கால அளவு முடிவடையும் வரை எந்த வகுப்பிலும் தகுதி நீக்கம் அல்லது பள்ளியிலிருந்து வெளியேற்றக்கூடாது.<br>(2) ஏந்தவொரு குழந்தைகளுக்கும் உடல் ரீதியான அல்லது மன உளைச்சலுக்கு உட்படும் தண்டனையை வழங்கக்கூடாது.<br>(3) தொடக்கக் கல்வி முடியும் வரையில் பள்ளிக் குழுமம் நடத்தும் எந்தவொரு தேர்விலும் தேர்ச்சி பெறத் தேவையில்லை.<br>(4) 25–ஆம் விதியின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளவாறு, தொடக்கக் கல்வி முடிக்கும் போது ஒவ்வொரு குழந்தைக்கும் (Course Completion) சான்றிதழ் வழங்கப்படவேண்டும்.<br>(5) இச்சட்டத்தின் விதித்தொகுப்பு விதிமுறைகளின்படி, தனி கவனம் செலுத்த வேண்டிய மாற்றுத்திறனாளி மாணவர்களும் மறுக்கப்படாமல் சேர்க்கை அளிக்கப்படவேண்டும். மேலும் மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு |

| | |
|---|---|
| | (6) இச்சட்டத்தின் 23 (1) ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளவாறு, குறைந்தளவு கல்வித் தகுதியுடன் ஆசிரியர்கள் பணியில் நியமிக்கப்படுகின்றனர். ஆனால், இச்சட்டம் செயல்படத் தொடங்கிய போது, குறைந்தளவு கல்வித் தகுதியைப் பெற்றிராத நடப்பு ஆசிரியர்கள், தங்களுடைய 5 ஆண்டு பணிக்காலத்திற்குள், இத்தகைய குறைந்தளவு கல்வித் தகுதியைப் பெற்றிருக்க வேண்டும்.<br>(7) இச்சட்டத்தின் 24(1) ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறான பணிப்பொறுப்புகளை ஆசிரியர்கள் மேற்கொள்ள வேண்டும்.<br>(8) தனிப்பட்ட பயிற்று நடவடிக்கைகளில், எந்தவொரு ஆசிரியரும் ஈடுபடக்கூடாது. |
| 07 | உரிய அதிகார அமைப்பு மற்றும் தமிழ்நாடு அரசு வரையறுத்துள்ள அடிப்படையிலான பாடத் திட்டத்தை , பள்ளிகள் பின்பற்ற வேண்டும். |
| 08 | இச்சட்டத்தின் 19ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, பள்ளியின் தரங்களையும், கோட்பாடுகளையும் பள்ளி நிர்வாகம் தவறாமல் பின்பற்றப்பட வேண்டும். |
| 09 | பள்ளி வளாகத்திற்குள் அல்லது வேறு இடத்தில் அதே பள்ளி பெயரிலான பள்ளிகளில், அங்கீகாரம் அளிக்கப்படாத வகுப்புகள் நடத்தப்படக் கூடாது. |
| 10 | கல்வி மற்றும் திறன் வளர்ச்சி மேம்பாடு தொடர்பான நோக்கங்களுக்காக மட்டுமே, பள்ளிக் கட்டங்கள் அல்லது ஏனைய கட்டுமானங்கள் அல்லது மைதானங்களை பள்ளி பயன்படுத்தப்பட வேண்டும். |
| 11 | 1860–ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 21/1860) கீழ் பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் வாயிலாக அல்லது தற்போது செயலலிருக்கும் எந்தவொரு சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள பொது அறங்காவலர்களால் பள்ளி செயல்படுகிறது என்பதை உறுதிப்படுத்த வேண்டும். |
| 12 | ஏந்தவொரு தனி நபர், குழு அல்லது தனி நபர்கள் அடங்கிய சங்கம் அல்லது ஏனைய பிற நபர்களின் ஆதாயத்திற்காகப் பள்ளி நடத்தப்படவில்லை என்பதை உறுதி படுத்த வேண்டும். |
| 13 | கணக்குகள் தணிக்கையிடப்பட்டு, பட்டயக் கணக்கர்களால் சான்றளிக்கப்பட வேண்டும் மற்றும் முறையான கணக்குகள் பற்றிய விவர அறிக்கைகள், விதிகளின்படி தயாரிக்கப்பட வேண்டும். ஒவ்வோராண்டும் கணக்கு விவர அறிக்கைகளின் நகல் ஒவ்வொன்றும், மாவட்டக்கல்வி அலுவலருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். |
| 14 | உங்களுடைய பள்ளிக்கு ஒதுக்கப்பட்டுள்ள பள்ளி அங்கீகார குறியீட்டு எண் இந்த அலுவலகத்திற்கு அனுப்பப்படுகின்ற கடிதங்களில், இக்குறியீட்டு எண் குறிப்பிடப்பட வேண்டும். |
| 15 | பள்ளிக்கல்வித் துறை இயக்குநர் /முதன்மைக் கல்வி / மாவட்டக்கல்வி அலுவலரிடமிருந்து அவ்வப்போது கோரப்படுகின்றவாறு பள்ளி நிருவாகம் அனுப்பி வைக்கின்றது. இத்தகைய அறிக்கைகள் மற்றும் தகவல்கள், பள்ளி அங்கீகார நிபந்தனைகள் தொடர்ந்து முபமையாக பாதுகாக்கப்படும் வகையிலும் அல்லது பள்ளிச் செயல்முறைகளிலுள்ள குறைபாடுகளைக் களைவதற்கும், மாநில அரசு / உள்ளூர் கல்வி அதிகார மன்றம் பிறப்பிக்கப்படுகின்ற இத்தகைய கட்டளைகளுக்கு இணங்க செயல்பட வேண்டும். |
| 16 | சங்கங்களின் பதிவு புதுப்பிக்கப்பட வேண்டியிருந்தால், அவை புதுப்பிக்கப்படுவது உறுதி செய்யப்படவேண்டும். |
| 17 | யாதொரு சட்ட விதித்துறைகள், விதிகள் அங்கீகார நிபந்தனைகள் மீறப்பட்டிருப்பதாக கண்டறியப்பட்டால் மற்றும் இது நிருபிக்கப்பட்டால் பள்ளி அங்கீகாரம் திரும்பப் பெறப்படும். |
| 18 | எல்.கே.ஜி. முதல் 3ம் வகுப்புவரை தரைத்தளத்தில் மட்டுமே நடத்தப்பட வேண்டும். |
| 19 | சுகாதாரச் சான்றிதழ், தீத்தடுப்பு தடையின்மைச் சான்று ஒவ்வொரு ஆண்டும் புதுப்பித்து முன்னிலைப் படுத்தப்படவேண்டும். |
| 20 | பள்ளி வாகனம் மோட்டார் வாகன சட்டப்படி தகுதிச் சான்றிதழ், உரிமம், காப்பீடு போன்றவை பேருந்துகளுக்கு நடப்பில் இருக்க வேண்டும் மற்றும் அனுபவமிக்க ஓட்டுநர் மற்றும் பாதுகாவலருடன் பேருந்தினை இயக்கப்பட வேண்டும். |
| 21 | தனியார் பள்ளிகளுக்கான கட்டண நிர்ணயக்குழுவிற்கு இணையதளம் மூலம் உரிய ஆவணங்களுடன் விண்ணபித்து கல்விக் கட்டணத்தை நிர்ணயித்துக்கொள்ள வேண்டும். |
| 22 | உரிய கல்வித் தகுதிபெற்ற தகுதியான ஆசிரியர்களை மட்டுமே கற்றல் கற்பித்தல் பணிக்கு உட்படுத்தப்பட வேண்டும். |
| 23 | தமிழ்நாடு தனியார் பள்ளிகள் நடைமுறைச் சட்டம் 1974 உட்பிரிவு 29 ன் படி கூறப்பட்டுள்ள அம்சங்களையும், அதற்குபின்னர் அரசால் அவ்வப்போது வெளியிடப்பட்டுள்ள அரசாணைகளின்படி பள்ளிகளில் வழுவாது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |
| 24 | பள்ளியில் பயிலும் மாணவ மாணவியர், கல்வி பாதிக்கப்பட கூடாது என கருத்தின் அடிப்படையிலும் இவ்வாணை வேறு எவ்வித செல்பாடுகளுக்கும் பயன்படுத்தக் கூடாது என்ற நிபந்தனையின் பேரிலும் இத்தொடர் அங்கீகாரம் ஆணை வழங்கப்படுகிறது |
| 25 | இவ்வாணை 1 முதல் 5 வகுப்புகள் நடத்த கல்வித்துறையின் தற்போது நடைமுறையிள்ள விதிகளுக்குட்பட்டு வழங்கப்படுகிறது. எக்காரணத்தைக் கொண்டும் 6 முதல் 8 வகுப்புகள் அங்கீகாரமின்றி நடத்தப்படக்கூடாது. |
| 26 | கொரோனா வழிகாட்டு நடைமுறைகளை முழுமையாக பள்ளி வளாகத்தினுள் கடைப்பிடிக்க வேண்டும். |
| 27 | சுகாதாரச் சான்றிதழ், தீத்தடுப்பு தடையின்மைச் சான்று காலாவதி ஆகியிருந்தால் உடனுக்குடன் புதுப்பித்து முன்னிலைப் படுத்தப்படவேண்டும். |
| 28 | மாணவர்களுக்கு ஊறு விளைவிக்கக்கூடிய எவ்வொரு செயலும் முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும். கட்டிட அமைப்புகளுக்கான பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும். |

28/6/22

மாவட்டக் கல்வி அலுவலர்,
வாணியம்பாடி

பெறுதல்– தாளாளர்/செயலாளர் – நயாமதரசா சிறுபான்மை உருது(நிதியுதவி பெறாவ) தொடக்கப்பள்ளி,
நேதாஜி நகர், ஆகாங்காயம் ரோட், வாணியம்பாடி திருப்பத்தூர் மாவட்டம்.
நகல் – நாட்றம்பள்ளி – வட்டாரக் கல்வி அலுவலர், வாணியம்பாடி கல்வி மாவட்டம், திருப்பத்தூர்.